# சர்ச்சைக்குரிய பிரச்னைகளில் மந்திரி மௌனம்

Registered as a Newspaper in Ceylon * ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

[illegible] 49 மலர் 10
[illegible] இதழ் 163
National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் [illegible] ஆடி 14 [illegible] 3 திங்கட்கிழமை (29-7-68)

குரும்பசிட்டி, ஞாயிறு

மாவிட்டபுரம் மகோற்சவ ஆலயப்பிரவேசம் மற்றும் சர்ச்சைக்குரிய எந்த விஷயங்கள் பற்றியும் பேசமாட்டேன் என்று உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ தஹநாயகா தமது திருப்பிடம் கூறினார். ஆலயப்பிரவேசம் பற்றிய முழுப்பொறுப்பையும் அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதற்காக திரு. தஹநாயக்கா நேற்றுக் காலை புகையிரதத்தில் காங்கேசன்துறையை வந்தடைந்தார்.

அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா, சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் திரு. ஜே. வி. தம்பிநாயகம் ஆகியோர் காங்கேசன்துறை புகையிரதநிலையத்தில் மந்திரியை வரவேற்றார்கள்.

மந்திரி தஹநாயக்கா கீரிமலைக்குச் சென்று ஸ்நானம் செய்தபின் தோலகட்டிக்குச் சென்றார். காங்கேசன்துறை 'ரெஸ்ற் ஹவுஸில்' மந்திரிக்கு சாவகச்சேரி எம். பி. நண்பகல் விருந்தளித்தார். நேற்றுப் பிற்பகல் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டபின் கொழும்பு திரும்பினார்.

# சமூக குறைபாடுகள் சட்டத்தில் திருத்தம்?

## பிரதமர் சூசக அறிவிப்பு

### மாவை சம்பவங்கள் பற்றி அரசாங்கம் ஆராய்கிறது

கொழும்பு, ஞாயிறு

**சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தில் பலவீனங்கள் இருக்குமானால் அவைகளை நிவர்த்தி செய்வதற்கான திருத்தங்கள் கொண்டு வர அரசாங்கம் தயாராய் இருக்கிறது.**

இந்த உறுதிமொழியை பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா இன்று மக்கள்பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் சம்பந்தமாகவும் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக பொதுவாகவும் எதிர்க்கட்சியினர் ஒத்திவைப்புப் பிரேரணையின்போது கேட்ட சரமாரியான கேள்விகளுக்கு பிரதம மந்திரி பதிலளித்தார்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் சமீபத்

(6-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள தேர்ச்சி நிபந்தனை

### தமிழரசுக் கட்சி நிலைபற்றி அமிர்தலிங்கம் அறிக்கை

நல்லூர், திங்கள்

தமிழ்பேசும் அரசாங்க ஊழியர் பற்றியும் அவர்கள் விஷயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கைபற்றியும் கட்சியின் பொதுச்செயலாளரான திரு. அ. அமிர்தலிங்கம் பின்வரும் அறிக்கை யொன்றை விடுத்துள்ளார்.

1956-ம் ஆண்டு தனிச் சிங்களத்தைக் கொள்கையாகக்கொண்ட அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தமுதல் சிம்மாசனப் பிரசங்க விவாதம் நடைபெற்ற உடன் அவர்களின் தனிச்சிங்களக் கொள்கைக்கு எதிர்ப்பு நடவடிக்கையாக திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமவர்கள் ஓர் ஐந்து அம்சத் திட்டத்தை வெளியிட்டார். அதில் ஓர் அம்சம் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் சிங்களம் படிக்கவோ, சிங்களத்தில் வேலைசெய்யவோ மறுக்கவேண்டுமென்பது. இத்திட்டத்தை யாழ். முற்றவெளியில் நடைபெற்ற ஒரு சகலகட்சிக் கூட்டத்தில் எல்லாத் தமிழ் கட்சிகளின் தலைவர்களும் சேர்ந்து வெளியிட்டார்கள். அதன் பின்னர் மற்றக்கட்சிகள் இவ்வெதிர்ப்பு நடவடிக்கையை மறந்திருந்தாலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி 1965 வரை இவ்வெதிர்ப்பு நடவடிக்கையை வலியுறுத்திவந்தது. இவ்விஷயத்தில் புதிய ஊழியர் பழைய ஊழியர் எல்லோரையும் ஒத்துழைக்கும்படி கட்சி வேண்டது. புதிய ஊழியரை சிங்களம் படிக்க வேண்டாம் என்று நாம் கூறவில்லை என்று கட்சித் தலைவர் டாக்டர் நாகநாதன் அவர்கள் கூறியது தவறாகும். இப்படி எமது வேண்டுகோளின்படி சிங்களம் படிக்க மறுத்த தமிழ் ஊழியரை நாம் கைவிட்டுவிட்டதாகக்கூறும் குற்றச்சாட்டு நியாயமற்றது. பழைய ஊழியர் விடயத்திலும், புதிய ஊழியர் விடயத்திலும் நாம் செய்திருப்பவற்றை விளக்கிக்கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

(6-ம் பக்கம் பார்க்க)

## தியாகராஜஸ்வாமிகள் 200-வது ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

இராமநாதன் இசைக் கல்லூரியில் நாளை செவ்வாய்க்கிழமை தியாகராஜஸ்வாமிகளின் 200-வது ஆண்டுவிழா உற்சவம்நடைபெறவிருக்கிறது. பலவித கலை நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெறும்.

## தமிழர் தொகை அதிகரிப்பு: சிங்களவர் பிறப்புகுறைவாம்

### குடிசன மதிப்பீட்டு இலாகா இப்படிக் கூறுகிறது

கொழும்பு, ஞாயிறு

இலங்கையில் தமிழர்களின் பிறப்பு விகிதம் அதிகரித்துள்ளதாகவும், சிங்களவரின் பிறப்பு விகிதம் குறைந்துள்ளதாகவும், அண்மையில் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டில் தெரியவந்துள்ளதாக, குடிசன மதிப்பீட்டு இலாகா அறிவித்துள்ளது.

1953-ம் வருடம் முதல் 65-ம் வருடம்வரை ஒவ்வொரு ஆயிரத்திற்கும், தமிழர்கள் 36 66 விகிதமும், சிங்களவர்கள் 34.76 விதமும் பிறப்பு விகிதம் கணக்கிடப்பட்டுள்ளது.

இதேசமயம் இந்தியத்தமிழர்களின் பிறப்பு விகிதம் 34.4 வீதத்திலிருந்து 27.7 வீதமாக குறைந்துள்ளது. இந்திய முஸ்லிம்களின் பிறப்புவிகிதமும் குறைந்துள்ளது.

(6ம் பக்கம் பார்க்க)

அச்சுவேலியில் இரவில் துப்பாக்கிச் சூடு

## ஒருவர் மாண்டார் ஒருவர் காயம்; ஒருவர் கைது

நல்லூர், ஞாயிறு

அச்சுவேலியில் நேற்றிரவு நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தவராசா என்பவர் ஸ்தலத்தில் மாண்டார். [illegible] ஆர். குலசிங்கம் என்பவர் அபாயகரமான நிலைமையில் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. தவராசா, இன்ஸ்பெக்டர் ஹேரத் ஆகியோர் இச்சம்பவம் பற்றி விசாரணை நடத்திவருகின்றனர்.

நேற்றிரவு 10 மணியளவில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் ஒரு டாக்ஸியை பொலிஸார் தேடி வருகின்றனர். இது சம்பந்தமாக இதுவரை சந்தேகத்தின் பேரில் ஆனந்தராசா என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

இச் சம்பவத்தை தொடர்ந்து அச்சுவேலியில் மீண்டும் பொலிஸ் நி[illegible]க்கப்பட்டதாகவும் [illegible]ஸார் நிலைமையை அவதானித்து வருவாரென்றும் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், நேற்று அச்சுவேலிக்கு நேரில் சென்று நிலைமையை அவதானித்தார்.

சம்பவம் நடந்த இடத்தில் காணப்பட்ட மற்றொரு டாக்ஸியை பொலிஸார் கைப்பற்றி தடுத்து வைத்துள்ளனர்.

ஆயுதம் தாங்கிய [illegible] வைக்கப்பட்டுள்ளது.

## மயிலிட்டியில் துப்பாக்கிப்பிரயோகம்

### 6 பேர் ஆஸ்பத்திரியில்

அளவெட்டி, ஞாயிறு

மயிலிட்டியில் இன்றுகாலை நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 7 பேர் படுகாயமுற்று ஆபத்தான நிலையில் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரு கோஷ்டியினருக்கிடையே ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து இத்துப்பாக்கிப் பிரயோக சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.

படுகாயமுற்ற விஜயரெத்தினம் இரத்தினராஜா எம். மாணிக்கவாசகர் எஸ். சுந்தரலிங்கம், எஸ். அழகரத்தினம், வி. பரஞ்சோதி, எஸ் அரிகரதாசன் ஆகியோர் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. ஹேரத் ஸ்தலத்திற்குச் சென்று அமைதி நிலைநாட்டினார். ஆயுதம் தாங்கிய பொலிசார் மேலும் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் காவல்புரிந்துவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

எவனுடைய இதயம் ஏழைகளுக்காக இரங்கி வருந்துகிறதோ அவனே மகாத்மா?
-சுவாமி விவேகானந்தர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna.
Post Box: 49 Jaffna
Telephone: 389.

கீலக வருஷம் ஆடி மாதம் 14-ந் திகதி
(29-7-68)


## வன்முறை செயல்கள்

நேற்று முன்தினம் இரவு அச்சுவேலியில் நடைபெற்ற ஒரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் ஸ்தலத்திலேயே மாண்டிருக்கிறார். மற்றொருவர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். யாழ்ப்பாணப்பகுதியில்சென்ற சில மாதங்களுக்குள் இதுபோன்ற, வருந்தத்தக்க வன்முறைச் சம்பவங்கள் பல நடைபெற்றுள்ளன. இச்செயல்களையிட்டு யாரும நிச்சயம் திம்மதியடைய முடியாது.

அச்சுவேலித் துப்பாக்கிச்சூட்டுச்சம்பவம் பற்றி பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர். இதற்கு முன்னரும் அச்சுவேலி, சங்கானை, கொடிகாமம் ஆகியஇடங்களில் நடைபெற்ற வன்முறைச்செயல்கள் பற்றிப் பொலிசார் விசாரணை செய்து வருவதுடன் சில சம்பவங்களுக்குக் காரணமானவர்கள்மீது வழக்கும் தொடரப்பட்டிருக்கிறது. பொலிசார் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுத்தால் மட்டும் போதாது என்பதைத்தான் வன்முறைச்செயல்கள் பல இடங்களுக்கும் பரவிவருவது காட்டுகிறது. துப்பாக்கிச்சூடு, எறிகுண்டுவீச்சு ஆகிய வன்முறைச் சம்பவங்களுக்கு ஒருவர் இருவரோ, ஒரு தரப்பினரோதான் காரணமென்று சொல்வதற்கில்லை. அச்சுவேலிச் சம்பவமோ இதர சம்பவங்களோ திடீரென நடைபெற்ற அல்லதுதிடீரென ஆத்திரமூட்டப்பட்டதால் நடைபெற்ற சம்பவங்களென்றோ கூறிவிடமுடியாது. இச்செயல்கள் திட்டமிட்டு நடைபெற்றிருக்கின்றன; நடைபெற்று வருகின்றனவென்றே கருதுவதற்கு இடமிருக்கிறது.

வன்முறைச் செயல்களை யாரும் விரும்பிமேற்கொள்ள மாட்டார்கள். வேறு வழியில்லையென்ற வெறுப்பும், விரக்தி மனப்பான்மையும் தான் இச்செயல்களுக்குப் பெரிதும் காரணமாகின்றன. என்றாலும் இச்செயல்களுக்குப் பின்னணித் தூண்டுதல்கள் இருக்கக்கூடும். பல நெடுங்காலமாக மக்கள் அமைதியாக வாழ்ந்து வந்த யாழ்ப்பாணப் பகுதியில் திடீரென வன்முறைச் செயல்கள் அதிகரிக்கக்காரணம்என்ன இச்செயல்களை நிறுத்துவதற்குச் சரியான வழிவகைகள் என்ன? இவை பற்றி அரசாங்கம் 'ஏனோ தானோ' என்றிருக்காமல் உடனடியாக ஆராய்ந்து மக்கள் அமைதியாகவும், சமாதானமாகவும் வாழ்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டியது அவசியம். இதேசமயம் யாழ்ப்பாணப்பகுதி மக்கள் மட்டுமல்லாது இலங்கைவாழ் மக்கள் அனைவருக்கும் குறிப்பாக சமய, சமூகஸ்தாபனங்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் விசேஷ கடமையும பொறுப்புமுண்டு. எந்தவொருசிறிய சம்பவத்தையும் பெரிதுபடுத்தி அதனால் அரசியல்லாபம் சம்பாதிக்கலாமென்ற மனப்பான்மையை உடனடியாக ஒதுக்கித்தள்ளிவிட்டு, எந்தவொருபிரச்னையையும் வன்முறைச் செயல்களினால்தீர்வுகாண முடியாதென்பதை மக்களுக்கு உணர்த்தி, சமூகத்தின்,மக்களின், நாட்டின் நலனையும் ஒற்றுமையையும் மக்களுக்குஉணர்த்தி அவற்றை நிலைநாட்ட முன்வரவேண்டும். ஒரு சாதியோ, மத[illegible] லாதாகிகோ இங்கு தோன்ற மாட்ட[illegible]

வவுனியாவில்

## ஜப்பானிய நிபுணர்கள்

வவுனியா, ஞாயிறு

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜப்பானிய நிபுணர்கள் வவுனியாவுக்கு வந்துள்ளனர். வவுனியாவில் மரக்கறி, நெல் ஆகியவற்றைக் கூடுதலாக உற்பத்தி செய்வது பற்றிய பேச்சுவார்த்தையை வவுனியா மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிபர் திரு. பி. மாணிக்கவாசகருடன் நடத்தினர்.

## 10-வது ஆண்டு விழா

கொழும்பு, ஞாயிறு

தேசிய மயமாக்கப்பட்ட கொழும்பு துறைமுகத்தின் 10-வது ஆண்டு விழாவை அடுத்தமாதம் முதலாம் திகதி வெகு விமரிசையாகக் கொண்டாட துறைமுகக் கூட்டுத்தாபனம் ஒழுங்கு செய்துள்ளது. துறைமுக [சரக்கு]க் கூட்டுத்தாபன இந்து சங்கமும் சைவாசார முறைப்படி அன்று ஒரு நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளது. காலை ஏழு மணி முதல் யாகம், பிரார்த்தனை பஜனை, சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற இருக்கின்றன.

## இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை பெற்றோர் தின விழா இன்றுமாலை பாடசாலை மண்டபத்தில் கோப்பாய் வட்டார வித்தியாதரிசி திரு. வே. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும். கோப்பாய் எம்.பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை, யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை ஆகியோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்து கொள்வர்.

## சின்ன மடுவில்

ஊர்காவற்றுறை, திங்.

சின்னமடு செபமாலை மாதா கோவிலில் நேற்று முன்தினம் திருநாட்கள் ஆரம்பமாகின. இன்றுமாலை செபமாலை, திவ்விய எழுந்தேற்றம், திருப்பலி என்பன நடைபெறும்.

## நினைவு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

ஸ்ரீலஸ்ரீ சிவபாதசுந்தரனார் நினைவுநாள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு. பொ. நவரத்தினம் தலைமையில் நாளைமாலை நடைபெறவிருக்கிறது.

ஆசிரியருக்குக் கடிதம்

# நல்லூரில் ஒழுக்கவழக்கம்

நல்லூர்த் திருவிழாக்கள் ஆரம்பித்துவிட்டன. பெருகிக்கொண்டேவரும் வழிபடுவோரின் தொகைக்குக் கோயில் பிராகாரங்களில் போதிய இடமில்லை என்பது உடனே நினைவுக்கு வருகின்றது. முக்கியமாக உள்வீதியில் ஜனங்கள் அங்கப்பிரதட்சணம் செய்வதால் நெருக்கடி அதிகமாகின்றது. உள்வீதியில் உருளுவது சமயத்துக்கு மாறுவது. கோயில் முதலாளி இதை உடனே தடுக்க நடவடிக்கை எடுப்பாரென்று நம்புகின்றேன்.

முக்கியமான திருவிழாக் காலங்களிலும் கடைசிப் பத்துத் திருவிழாக்களில் அநேகமாக ஒவ்வொரு நாளும் வெளிவீதியில் ஜனக்கூட்டம் கட்டுமீறிப் போய்விடும். இக்கூட்டத்தில் பக்தர்கள் மட்டுமல்லாமல் பொழுதுபோக்காக வரும் இளம் பெண்களும் வாலிபர்களும் வேறு சமயத்தவரும் இருப்பார்கள்.

கட்டைச் சட்டையணிந்த இளம் பெண்கள் தனியாகவோ அல்லது கண் தெரியாத கிழவிகளுடன் கட்டிக்கொண்டோ, ஏராளமாக வருவார்கள். இவர்கள் கோயிலுக்குப் போகும் போது மேல் அங்கங்களையும், கீழ் அங்கங்களையும் காட்டாமல் தங்கள் வயது, சாதி, சமயம் முதலியவற்றிற்கேற்ப ஒழுங்காக உடைதரித்து வரும்படி பெற்றோர் பார்த்துக் கொள்ளவேண்டும். துணையில்லாமல் அவர்களை விடப்படாது. திருவிழா முடிந்தவுடன் ஐஸ்கிறீம் கடைகளில் தங்கி நிற்கவிடாமல் வீட்டுக்குப் போய்விடவேண்டும்.

இந்து வாலிபர், வெளிவீதியிலும் காற்சட்டை அணியப்படாது. அவர்கள் கடவுளைத் தியானிக்கவேண்டுமேயன்றிச் சுற்றி நிற்கும் மானிட ஜென்மங்களைப் பார்க்கப்படாது.

கண்காட்சிக்காக வரும் பிற மதத்தினர் பக்தர்களுக்கு இடைஞ்சல்கொடுக்காமல் வீதிக்கு வெளியே நிற்கவேண்டும். அவர்களை அங்கு தேவையில்லை.

வெளி வீதியும் ஒரு புனிதமான இடமே. ஆகையால் வீதியில் நடமாடுகிறவர்கள் காலணிகள் அணியப்படாது. பெரும் கஷ்டப்பட்டுக் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கும், அழைப்பில்லாமல் வரும் பிற நாட்டுக்காரருக்கும் இது பொருந்தும்.

டாக்டர் கே. கனகரத்தினம்
யாழ்ப்பாணம்.
27-7-68

## சாரணர் ஆண்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

தென்மராட்சி பாடசாலைகளின் சாரணர் ஆண்டு விழா மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில் நாளை மாலை 5 மணி தொடக்கம் மறுதினம் மாலை 5 மணிவரை நடைபெற இருக்கிறது.

## கருத்தரங்கில் 'சமூக வியாதிகள்'

யாழ்ப்பாணம், திங்கள்

சங்கானைப் பட்டினசபை நூல்நிலையத்தில் ஆகஸ்ட் மாதம்1-ந்திகதிமாலை 5மணியளவில் டாக்டர் பி. சிவசோதி 'சமூக வியாதிகள்' என்னும் பொருள் பற்றி கருத்துரை வழங்குவர்.

## காந்தி நூற்றாண்டு விழா ஏற்பாடு

கொழும்பு, ஞாயிறு

இலங்கை இந்திய நட்புறவுச் சங்கத்தின் காந்தி நூற்றாண்டுவிழாச் சபைத் தலைவராக திரு. எலிஸ் பெரேராவும், உபதலைவர்களாக திருவாளர்கள் எஸ். சோமசுந்தரம், தெரணியகல ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். காரியதரிசிகளாக திருவாளர்கள் அல்போர்ட் எதிரிசிங்கா. எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோரும், தனாதிகாரியாக திரு. நிலாபார்ட்டும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# 'தமிழ் பல்கலைக்கழகம் உடனடியாக வேண்டும்'

## பருத்தித்துறை தமிழரசு வாலிபமுன்னணி தீர்மானம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

தமிழரசுக் கட்சியினரது மாவட்டசபைக் கோரிக்கை அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டபின்னரும் அவர்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து இருப்பதாக இருந்தால் வரவுசெலவுத் திட்டம்வர முன்னர் தமிழ்பல்கலைக் கழகம், பனம் பொருள் ஆராய்ச்சிநிலையம் ஆகியன அமைப்பதற்கு மசோதா உடன்கொண்டு வரப்பட வேண்டும்'' எனக்கோரும் தீர்மானமொன்று பருத்தித்துறை தமிழரசு வாலிபமுன்னணிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தலைவர் சி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வரும்தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மேற்கூறப்பட்ட மசோதா கொண்டுவரப்படாவிட்டால், வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களித்து விட்டு அரசாங்கத்தி[illegible] வெளியேறவேண்டும். தமிழ் [illegible] தனித்தமிழ்நாடு கோரிப் போராட்டம் நடத்துவதென்ற தமிழரசு வாலிப முன்னணியின் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவிப்பதுடன், 'வடமாகாணத்திற்கு இனிமேல் வருகைதரும் தேசிய அரசாங்க மந்திரிமாருக்கு கறுப்புக்கொடிகாட்டி எதிர்ப்புத் தெரிவிப்பது.

மேற்படி தீர்மானங்களைச் செயலாளர் திரு. ஆ. பஞ்சலிங்கம் தமிழரசு தலைமைப் பீடத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

அவ்வளவுக்கு வாக்காள மகா ஜனங்கள் அவர்களை தெய்வமெனப் போற்றுவார்கள். வாக்காளருக்கும் பேச்சுத்தான் தேவை. 'கூ. இன்றைக்கு எங்கடை கன்னன் பத்து மணிநேரம் பாராளுமன்றத்தில் பேசினரும்' என்று புகழ்ந்து கொண்டே படுத்துத் தூங்கிவிடுவார்கள்.

செயலைப்பற்றி யாருக்கு வேணும் கவலை?

— வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

நாடாளுமன்றத்திலும் வெளியே பொது மேடைகளிலும் ஒருவர் மீதொருவர் வசைமாரியும் விஷக்கணைகளும் பொழிந்து கொண்டிருக்கும் நமது எம்.பி.மாரும் செனேட்டர்மாரும் வருடத்தில் ஒரு நாளைக்காவது தமது கட்சிபேதங்களை மறந்து, சௌஜன்யமான சூழ்நிலையில் கூடியிருந்து சிரித்துக் களித்து அளவளாவ வேண்டுமென்ற நோக்கத்துடன் நாடாளுமன்றத்தின் சபாநாயகர் திரு. ஷேர்லி கொரியா இவர்களையெல்லாம் வருகிற ஆகஸ்ட் மாதம் 16-ம் திகதி ஒரு விருந்துக்கு அழைத்திருக்கிறாராம்.

முன்னாள் சபாநாயகரான ஐனாப் எச். எஸ். இஸ்மெயில் 'நமது அரசியல்வாதிகள் பேசுவதிலேயே அதிக நேரம் செலவு செய்கிறார்களே ஒழிய செயலில் ஈடுபடுகிறார்களில்லை' என்று மன்றில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் பிரலாபித்துள்ளார்.

பாவம், இவ்விருவரும் மணிக்கணக்காக, நாள் கணக்காக வரண்ட நீண்ட சொற்பொழிவுகளையும் தூங்கி வழியும் பிரசங்கங்களையும் கேட்டுக் கேட்டு எவ்வளவு அலுத்துப்போய் விட்டார்கள் என்று பார்த்தீர்களா?

அரசியல்வாதிகள் நன்றாக உண்டு குடித்து இருக்கும் போதாவது தங்கள் அரசியல் நாவை அடக்கி வைத்திருக்கட்டும் என்ற எண்ணத்துடன் திரு. கொரியா விருந்து வைக்கிறார் ஆனால் அவருடைய எண்ணம் நிறைவேறுமா? எனக்கென்றால் சந்தேகம்.

விருந்தில் பரிமாறப்பட்ட தக்காளிப்பழம் நல்ல தளதளவென்ற சிகப்பாயிருந்தது என்று வஞ்சகமில்லாமல் டாக்டர் என். எம். பெரேரா சொல்லுகிறார் என்று வைத்துக் கொள்வோம். 'ஆமாம், என்றாலும் உங்களைப்போல அவ்வளவு ரத்தச் சிகப்பில்லை' என்று ஆர். ஜி. சேனநாயகாவின் குறுகுறுத்த நாக்கோ சும்மாவிருக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

உளுந்து வடை மிகவும் ருசியாயிருக்கிறதென்று முகமனுக்காக வட்டுக்கோட்டை அமிர்தலிங்கம் அபிப்பிராயம் தெரிவித்துவிட்டாரென்று வைப்போம். இதைக்கேட்டுக் கொண்டிருந்த சிறிமாவோ 'ஆமாம். ருசி மட்டுமல்ல, உங்கள் மாவட்டசபையைப் போல நல்ல வட்டமாயுமிருக்கிறது' என்று சொல்லத் துடிப்பாரல்லவா?

இந்த மாதிரி சம்பாஷணைகளைக் கேட்டுக் கொண்டிருக்கும் நிற எம். பி.க்கள் சும்மாவா இருக்கப் போகிறார்கள்? ஒரு போதுமில்லை. மிஸ்டர் கொரியா. அரசியல்வாதிகள், எங்கெங்கே என்னென்ன சந்தர்ப்பத்தில் சந்தித்தாலும் தங்கள் கைவரிசையைக் காட்டாமல் இருக்கமாட்டார்கள். அவர்களுக்கு பேச்சுத்தான் உயிர். பேசிக்கொண்டிட்டால் அவர்கள் அடித்துப்போட்ட பாம்பு போலாகிவிடுவார்கள். செயலைப்பற்றி அவர்களுக்கு கொஞ்சத்தேனும் கவலையில்லை. அந்த விஷயத்தை அவர்கள் அரசாங்க ஊழியர்களிடம் விட்டுவிடுவார்கள். பேச்சுத்தான் முக்கியம்.

எவ்வளவுக்கு உரக்கக் கூச்சலிட்டுக் கத்துகிறார்களோ அவ்வளவுக்கு அவர்கள் வீரப்புலிகளாகிவிடலாம். எவ்வளவுக்கு தொண்டை கிழியக் கீச்சிடுகிறார்களோ

(4ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செக். தலைவர் டுபெக்குக்கு செக். ராணுவம் ஆதரவு

## புதிய பாதையிலிருந்து திரும்புவதில்லை என உறுதி

பிராக், ஜூலை 28

செக்கோஸ்லாவாக்கியத் தலைவர் திரு. டுபெக்கின் புதிய சோஷலிஸச் சுதந்திரக் கொள்கைக்குச் செக்கோஸ்லாவாக்கிய இராணுவத்தின் ஆதரவு கிடைத்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் திரு. டுபெக்குக்கு வந்து குவியும் ஆயிரக்கணக்கான கடிதங்களில், மக்கள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

செக். பாதுகாப்பு அமைச்சும், தனது முழு ஆதரவையும் திரு. டுபெக்கின் புதிய அரசியல் கொள்கைக்கும், அவருடைய நடைமுறைத் திட்டத்துக்கும் அளித்துள்ளது.

திரு. டுபெக், நேற்று ஒரு டெலிவிஷன் நிகழ்ச்சியில் பேசுகையில், செக்கோஸ்லாவாக்கியாவின் புதிய சுதந்திரக்கொள்கை சோஷலிஸத்துக்கு ஆபத்தானது என்ற உண்மையை சோவியத் ரஷ்யா விரைவில் விளங்கிக்கொள்ளுமெனத் தாம் நம்புவதாகக் கூறினார்.

நாட்டின் புதிய கொள்கை மக்களுக்கு அதிக அதிகாரத்தையும், சுபீட்சத்தையும் அளிக்குமெனக் கூறிய அவர், புதிய பாதையிலிருந்து ஓர் அடியாவது திருப்பி எடுத்து வைப்பதென்ற பேச்சுக்கே இடமில்லையென்று உறுதியுடன் கூறினார்.

### ரஷ்யாவில்

மாஸ்கோவிலிருந்து வரும் செய்திகள், ரஷ்ய பாதுகாப்பு மந்திரி மார்ஷல் கிரெச்கோவ், சோவியத் யூனியனுடனான மேற்கத்திய எல்லைகளில் நடைபெறும் விமான எதிர்ப்புப் பயிற்சிகளை பார்வையிட்டதாகக் கூறுகின்றன.

## ரஷ்ய-பாகிஸ்தான் உடன்படிக்கை

மாஸ்கோ, ஜூலை 28

மீன்பிடித்துறையில் கூட்டுறவுக்கு வகைசெய்யும் சோவியத் - பாகிஸ்தான் உடன்படிக்கையொன்று மாஸ்கோவில் கைச்சாத்தாகியுள்ளது.

மீன்பிடி வளங்களை ஆராய்வது, மீன்பிடித் தொழில் நிபுணர்களையும் மீன் இயல் நிபுணர்களையும் பயிற்றுவது, இரண்டாவது மீன்பிடித் துறைமுகமொன்றினை நிறுவுவதற்கான தொழில் நுட்ப அறிக்கையைத் தயார் செய்வது ஆகியவற்றில் சோவியத் யூனியன் உதவியளிப்பதற்கு மேற்படி உடன்படிக்கை வகைசெய்கிறது.

மீன்பிடி வளங்களை ஆராய்வதற்கென விரைவில் சோவியத் யூனியன் அனுப்பவிருக்கும் மீன்பிடி ஆராய்ச்சிப் படகுகளின் சேவையில் சோவியத் நிபுணர்களுடன், பாகிஸ்தான் நிபுணர்களும் கலந்துகொள்ளுவர்.

# சந்திரனில் மனிதனை இறக்கும் 'அப்பொலோ-7' திட்டம்

## தீவிர பயிற்சிகள் நடைபெறுகின்றன

கென்னடிமுனை, ஜூலை 28

சந்திரமண்டலத்துக்கு விண்வெளி வீரர்களைக் கொண்டுசெல்லும் அப்பொலோ' திட்டத்தின் அடிப்படையில் பூர்வாங்க ஏற்பாடுகள் கென்னடிமுனையில் வெள்ளிக்கிழமையன்று ஆரம்பமாயின. 'அப்பொலோ-7' என்ற விண்வெளிக்கப்பலில் மூன்று விண்வெளிவீரர்கள் தங்களுடைய பயிற்சிகளை ஆரம்பித்தனர்.

'அப்பொலோ-7' செயற்கைக் கோள் அக்டோபர் மாதத்தில் விண்வெளிக்கு ஏவப்படும். இதில் வீரர்கள் 11நாள்வரை அமர்ந்து உலகை வலம்வருவார்கள். இதற்கான ஒத்திகையே வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. 1970ம் ஆண்டு அம்புலித்தரையில் மனிதனை இறக்குவதற்காக அமெரிக்கா மேற்கொண்டுள்ள திட்டமே 'அப்பொலோ' திட்டமாகும்.

பிராணவாயு மட்டுமே நிரப்பப்பட்ட கோளத்துக்குள், நவீன தீ பாதுகாப்புக்கான உடைகளைத்தரித்த வீரர்கள் புகுந்தனர். வால்டர் சிகிரா, டொண் இசேல், வால்டர் கண்ணிங்காம் ஆகிய மூன்று வீரர்களுமே பயிற்சியில் ஈடுபட்டனர். இத்திட்டத்தின் அடிப்படையில் நடைபெறும் இரண்டாவது பயிற்சிஇதுவாகும். புதன்கிழமையன்று முதலாவது பயிற்சி வெற்றிகரமாக முடிவடைந்தது என்று அறிவிக்கப்பட்டது. இன்னும் சில நாட்களில் மூன்றுவது பயிற்சியும் ஆரம்பமாகும்.

இந்த மூன்று ஒத்திகைகளும் வெற்றியளிக்குமானால் 'அப்பொலோ-7' என்ற கருவிஏற்பனவே பூர்த்தியாக்கபட்டுவிட்ட சட்டேன் ரொக்கட்டில் பொருத்தப்படும். இதுவே விண்வெளிக்கு வீரர்களைக்கொண்டு செல்லும்.

# உலகக் கல்வி ஆண்டாக 1970 பிரகடனம்

## அமெரிக்க கோரிக்கை

ஜெனீவா, ஜூலை 28

1970ம் ஆண்டை உலகக் கல்வி ஆண்டாகப் பிரகடனம் செய்யுமாறு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது. இங்கு நடைபெறும் ஐ. நா. பொருளாதார சமுதாயக்குழுக் கூட்டத்தில் அமெரிக்கப் பிரதிநிதிகளின் தலைவராகக் கலந்துகொண்டுள்ள தூதர் திரு. ஆர்தர் கோல்ட்ஸ்மித் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஐ. நா. பொருளாதாரக் குழுவில் இதற்கான தீர்மானம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. ஒருமுகமான நிகழ்ச்சிநிரலொன்றினை வகுப்பதற்கு ஐ.நா.வின் கிளை அனைத்தும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று அத்தீர்மானம் கேட்டுக்கொண்டுள்ளது. நடப்பு ஆண்டில் நடைபெறவிருக்கும் அடுத்த கூட்டத்தில் ஐ. நா. பொதுச்சபை, 1970ம் ஆண்டை உலகக் கல்வி ஆண்டாக அறிவிக்க வேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

ஐ. நா. பொருளாதாரக் குழுவில் தீர்மானத்தைத் தாக்கல் செய்து பேசிய அமெரிக்கக் குழுவின் தலைவர் தூதர் கோல்ட்ஸ்மித் கல்வி ஆண்டுக் கொண்டாட்டத்துக்காக மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சிகள், உலக நாடுகளிடையே நல்லுணர்வையும், சகோதரத்துவ உணர்ச்சியையும் வளர்க்க வழிவகுக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

# நையாகரா ஆற்றைக் கடந்த முதல் மனிதன்?

ஹமில்டன், ஜூலை 28

நையாகரா ஆற்றை உலகில் முதற்தடவையாகக் கடந்தவர் எனக் கருதப்படும் 19 வயதான மெக்ஸிகன் ஒருவர், கனடாவுக்குள் சட்டவிரோதமாக உட்புகுந்த குற்றச்சாட்டின் பேரில், சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவரது பெயர் நிகலஸ் தொம்ஸன் ஆகும். இவரை விசாரித்த குடியேற்ற, பொலிஸ் அதிகாரிகள், இவர் 1000 அடி அகலமான நையாகரா ஆற்றை, சுழிகள் பாறைகள், இருள் இவற்றினூடாகக் கடந்துசென்றிருப்பாரெனத் தாம் நம்புவதாகக் கூறியிருக்கிறார்கள்.

ஆற்றின் அமெரிக்க, கனடியக்கரைகளில் தான்விட்டு வந்துள்ள அடையாளங்களை உலகிலேயே தான் தான் முதலில் நையாகராவைக் கடந்துவிட்டு உயிருடன் வாழும் ஒரே மனிதன் என்பதை நிரூபிக்கும் என்று நிகலஸ் தொம்ஸன் தெரிவித்துள்ளார்.

## 'பியூப்லோ திரைப்படம்

டோக்கியோ, ஜூலை 28

வடகொரியாவில் பிடித்து வைக்கப்பட்டுள்ள அமெரிக்கஉளவு கப்பல் 'பியூப்லோவின்' சிப்பந்திகள் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதைக்காட்டும் வடகொரிய செய்தித் திரைப்படமொன்று காண்பிக்கப்பட்டுள்ளது.

'தி பியூப்லோ' என்று தலைப்பிடப்பட்ட இப்படம் 'கொரிய மக்கள் இராணுவத்'தினால் தயாரிக்கப்பட்டதாகப் படத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.

# அல்ஜீரியாவுக்குள் கடத்தப்பட்ட இஸ்ரேலிய விமானம்

## பெண் பிரயாணிகளும் குழந்தைகளும் விடுவிக்கப்பட்டனர்

அல்ஜியர்ஸ், ஜூலை 28

அண்மையில், அரபுத் தேசிய வாதிகளால் அல்ஜீரியாவுக்குள் கடத்திச் செல்லப்பட்ட இஸ்ரேலியவிமானத்திலிருந்த பிரயாணிகளில், நான்கு இஸ்ரேலியப் பெண்களையும், மூன்று குழந்தைகளையும் அல்ஜீரிய அரசாங்கம் விடுவித்துள்ளது.

விமானப் பணிப்பெண்கள் மூவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர், டெல்அவிவ் வந்து சேர்ந்ததும், தடுத்து நிறுத்தப்பட்ட பிரயாணிகள், சிப்பந்திகள் அனைவரையும் அல்ஜீரிய அதிகாரிகள் நல்ல முறையில் கவனித்ததாகத் தெரிவித்தார்.

அல்ஜீரியாவில் பின்தங்கியுள்ள மற்றும் ஆண் பிரயாணிகளையும், சிப்பந்திகளையும் அல்ஜீரிய அரசாங்கம் இன்னும் 7 நாட்களில் விடுவிக்குமென அந்த விமானப் பணிப்பெண் மேலும் கூறினார்.

மொத்தம் 22 பேர் அல்ஜீரியாவில் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தனர்.

## விஷம்கொல்லியான ராட்சஸப் பல்லி

மாஸ்கோ, ஜூலை, 28

பயங்கர பாம்புகளின் விஷம்குறித்து மனித வர்க்கம் இனிப்பயந்து நடுங்க வேண்டியதில்லை. 'வாரன்' எனும் பெரிய பல்லி இந்த விஷம்கொல்லியாக உள்ளது. மத்திய ஆசியாவில் காணப்படும் இந்த ராட்சஸப்பல்லியை எந்தப் பயங்கரப் பாம்பு தீண்டினாலும் அது எவ்வித ஆபத்துக்கும் ஆளாகாது. 4 ஆயிரம் மனிதர்களைக் கொல்லக்கூடிய நாகபாம்பின் விஷத்தை இந்தப்பல்லியின் உடலுள் செலுத்தினாலும் அதைவிஷம் தீண்டாது. ஏனைய பயங்கரப் பாம்புகளின் விஷத்தையும் இதால் தாங்கமுடியும்.

இந்த ராட்சசப் பல்லியை வைத்து பாம்பு விஷத்திற்கு எதிரிடைக்க மருந்தை உருவாக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

## கைதடியில் இளை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு கைதடியில் நேற்றுமுன் [illegible]
[illegible] அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

# காந்தி நூற்றாண்டு விழாவுக்கு ஐ. நா. 3000 டொலர்

நியூயோர்க், ஜூலை 28

மகாத்மாகாந்தியின் நூற்றாண்டு விழாவையொட்டி, ஐ.நா. கல்வி, விஞ்ஞான, கலாச்சார நிறுவனம், 3000 டொலர் அளித்துள்ளது.

அடுத்தவருடம் செப்டம்பர் மாதம், புதுடில்லியில், காந்தியின் நூற்றாண்டுவிழா பின்னணியில், உலக சமாதானம் பற்றி நடைபெறவிருக்கும் சிறிய ஆசிய மகாநாடொன்றுக்கான செலவுகளுக்கு இந்த ஐ. நா. நிதி பயன்படுத்தப்படும் எனச் செய்திகள் கூறுகின்றன.

# பிலிப்பைன்ஸ் எல்லையில் மலேஷிய படைக்குவிப்பு

## மலேஷியா மறுப்பு

கோலாலம்பூர், ஜூலை28

மலேஷியாவுக்கும், பிலிப்பைன்சுக்குமிடையே தகராறுக்குட்பட்ட பிரதேசமான சபாவில், பிலிப்பைன்சுடனான எல்லையில், மலேஷியா துருப்புகளைப் பலப்படுத்தி வருவதாகக் கூறப்பட்ட செய்தியை மலேஷியா மறுத்துள்ளது.

கோலாலம்பூரில் பேசுகையில், எல்லைத்துருப்புகளின் நிலையில் புதிய மாற்றம் எதையும் மலேஷியா செய்யவில்லை என்று மலேஷிய துணைப்பிரதமர் திரு. அப்துல்ரஸாக் கூறினார்.

இந்தோனேஷியத் தலைநகரான ஜகார்த்தாவில், பிலிப்பைன்ஸ் வெளியுறவு மந்திரியைச் சந்தித்து சபா விவகாரம் பற்றிப் பேசத் தாம் தயாராகவிருப்பதாகவும் திரு. ரஸாக் குறிப்பிட்டார்.

அடுத்தமாதம் 5ந் திகதி ஜகார்த்தாவில் ஆரம்பமாகும். ஐந்து ஆசிய நாடுகள் மகாநாடொன்றுக்கு திரு. ரஸாக், மலேஷியக் குழு கோஷ்டிக்குத் தலைமை தாங்கிச் செல்கிறார்.

# 200 வியட்கொங் படகுகள் நாசம்

சைகோன், ஜூலை 28

தென்வியட்நாமின் வட பகுதியில், அமெரிக்க விமானங்கள் நடத்திய தாக்குதலொன்றில், 200 வியட்கொங் படகுகள் நாசமாக்கப்பட்டுள்ளதாகத் தென் வியட்நாமிலுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரியொருவர் அறிவித்துள்ளார்.

### தாய்லாந்தில்

இதற்கிடையில்தாய்லாந்திலுள்ள 6-வது அமெரிக்க விமானப் படைத்தளம், நேற்றுமுன்தினம் இனந்தெரியாத படைப்பிரிவொன்றின் தாக்குதலுக்குள்ளானதையடுத்து, பலத்த பாதுகாப்புச் செய்யப்பட்டுள்ளது.

## ஈழத் தமிழ்மன்ற அங்குரார்ப்பணம்

பம்பலப்பிட்டி, ஞாயிறு கொழும்பில் ஈழத் தமிழ் மன்றம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. திரு. அ. இராசரத்தினம் தலைமையில் மட்டக்குளி செல் மேரிஸ் வீதியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-திரு. அ. இராசரத்தினம்,- உபதலைவர். திரு. ஜனூப் எம். ஜவ்பர். செயலாளர் திரு. எம். ஏ. ஜேஸன்சன். உப செயலாளர் திரு- அலோசியஸ்சுந்தரம். பொருளாளர்: செல்வி சந்திராதேவி சார்த்தலிங்கம். உப பொருளாளர் பவுசுக்கனுன்.

நாட்டின் ஐக்கியத்திற்காகவும், பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் பாடுபடுவதுடன் பல இனமக்கள் வாழும் நம் நாட்டில் தேசிய உணர்ச்சி குலைக்கப்படாமல் பாதுகாக்க இம்மன்றம் முயற்சி செய்யும் எனத் தலைவர் பேசுகையில் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலி கிராமசபை வட்டார எல்லைகள்

யாழ்ப்பாணம், திங்கள் அராலி கிராமசபையின் 3ம், 4ம் வட்டார எல்லை விபரங்கள்:

## 3ம் வட்டாரம் (காளிகோவில்)

வடக்கு: தச்சர் ஒழுங்கை 45ம், 46ம் இலக்கக் கிராம சேவகர் பிரிவுகளின் எல்லையில் உள்ள மேட்டு வரம்பைச் சந்திக்குமிடத்திலிருந்து கிழக்கு நோக்கி, வம்பேட் பாலத்தைக் கடந்து மேலும் கிழக்கு நோக்கி, 1ம் வட்டாரத்தின் வட எல்லையைச் சந்திக்கும்வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

கிழக்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தெற்கு நோக்கிக் கோயில் ஒழுங்கையின் மத்திபோரமாகக் கிழவாலை—கிரவலை பொதுக் கட்டுவேலைத் திணைக்கள வீதியின் மத்தியைச் சந்திக்கும்வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

தெற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து மேற்கு நோக்கி கிழவாலை—கிரவலை பொதுக் கட்டுவேலை திணைக்கள வீதியின் மத்திபோரமாகவும், அங்கிருந்து தெற்கு நோக்கி 2வது மீன்பிடித் துறைமுக ஒழுங்கையின் மத்திபோரமாகவும் அங்கிருந்து மேற்கு நோக்கி ஒரு சிற்றொழுங்கையின் மத்திபோரமாகவும் அங்கிருந்து வடக்கு நோக்கிக் கம்ப ஒடைச் சந்தியில் கிழவாலை—கிரவலை பொதுக் கட்டுவேலைத் திணைக்களவீதியைச் சந்திக்கும்வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

மேற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கி தச்சர் ஒழுங்கையின் மத்திபோரமாக 3ம் வட்டாரத்தின் வட எல்லை தொடங்குமிடத்தைச் சந்திக்கும்வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

## 4ம் வட்டாரம் (கரப்பிட்டி)

வடக்கு: பெரிய குளத்திற்கு வடக்கிலுள்ள கமலிகுடை வாய்க்காலிலுள்ள ஓர் இடத்திலிருந்து கிழக்கு நோக்கி 45ம், 46ம் கிராம சேவகர் பிரிவுகளைப் பிரிக்கும் மேட்டு வரம்பின் மத்திபோரமாக 3ம் வட்டாரத்தின் வட எல்லை தொடங்கும் இடமான அம்மேட்டுவரம்பின் மத்தியைச் சந்திக்கும்வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

கிழக்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து 3ம் வட்டாரத்தின் மேற்கெல்லை ஓரமாகத் தச்சர் ஒழுங்கை, கிழவாலை—கிரவலை பொதுக் கட்டுவேலைத் திணைக்கள வீதியைச் சந்திக்கும் இடம்வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

தெற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து மேற்கு நோக்கி கிழவாலை—கிரவலை பொதுக் கட்டுவேலை திணைக்கள வீதியின் மத்திபோரமாகச் சொல்லப்பட்ட வீதியிலுள்ள பெரியகுளம் வாய்க்கால் மதகைச் சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

மேற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கிப் பெரியகுளம் வாய்க்காலின் மத்திபோரமாகப் பெரிய குளத்தைக் கடந்து 4ம் வட்டாரத்தின் வட எல்லை தொடங்குமிடத்தை சந்திக்கும்வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

அராலி கிராமசபையின் 5ம், 6ம் வட்டார எல்லை விபரங்கள் நாளை வெளிவரும்.

---

# கண்காட்சியில் முதலிடம்

உடுப்பிட்டி, ஞாயிறு

வடமராட்சிப் பகுதி விஞ்ஞான ஆசிரியர்களின் ஆதரவில் தொண்டமனாற்றில் விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடம் நிறுவுவதற்காக நடத்தப்பட்ட கலை, விஞ்ஞானக் கண்காட்சியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் அதிக காட்சிகளைப் பார்வைக்கு வைத்திருந்தது. 77 விஞ்ஞானக் கண்காட்சிகளும், 34 புவியியல் விளக்கப்படங்களும் இவ்வித்தியாலயக் கண்காட்சியில் இடம் பெற்றன.

# வியட்னும் பற்றி சொற்பொழிவு

குரும்பசிட்டி, ஞாயிறு

சுன்னாகம் பட்டினசபை நூல்நிலை ஆய்வுக்குழுவின் ஆதரவில் வருகிற 1ந் தேதி மாலை 6-30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை சேர்ந்த திரு. சிலன் கதிர்காமர், 'தமது வியட்னும் நாட்டுச் சுற்றுப்பிரயாண அனுபவங்கள்' என்ற பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார். இந்நிகழ்ச்சிக்கு முன்னைநாள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் தலைமை தாங்குவார்.

# யாழ். இந்து சாரணரின் சாதனை

நல்லூர், சனி

"ஒரே வருடத்தில் இரு அகில உலக சாரணர் ஜம்பொறியில் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிச் சாரணர் குழுவின் சாதனை எமது மாவட்டத்தில் முக்கிய அம்சமாக அமைகிறது" என்று யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் காரியதரிசியான திரு. ஆர். ஈ. இராசநாயகம் தமது வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் வாசஸ்தலத்தில் நடந்த சாரணர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்திற்கு சங்கத்தலைவர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமை தாங்கினார்.

இவ்வருடச் செயற்குழு பின்வருமாறு தெரிவு செய்யப்பட்டது.

தலைவர்: திரு. வேர்ணன் அபயசேகரா, உபதலைவர்கள்: திருவாளர்கள் என். சபாரத்தினம், எஸ். சிவசிதம்பரம், மூர்த்திரம் ஈ. பி. இராஜசிங்கம், டாக்டர் வி. ஈ. பசுபதி. செயற்குழுத் தலைவர்: திரு. ஜே. எம். சபாரத்தினம். பொதுக்காரியதரிசி: திரு. ஆர். ஈ. இராஜநாயகம். தனாதிகாரி: சி. தி. நடராஜன்.

# உரும்பிராய் உப மின்நிலையம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

உரும்பிராய் சந்தியின் மத்தியிலிருந்து 25 அடி தூரத்திற்கு உட்பட ஒரு உப மின்சார நிலையத்தை அமைப்பதனால் ஏற்படக்கூடிய ஆபத்தான விளைவுகளை உரும்பிராய் பட்டின சபைத் தலைவருக்கு தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியின் உரும்பிராய்க் கிளை சுட்டிக்காட்டியுள்ளது.

உபமின் நிலையம் அமைப்பது சம்பந்தமாக தமிழரசுக் கிளை பட்டினசபைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் பொதுமக்களுக்கு ஆபத்து நேராத விதத்தில் உத்தேச உபமின் நிலையத்தை பிறிதோர் இடத்திற்கு மாற்றுவது நல்லதெனக் குறிப்பிட்டு, அதற்குத் தோதான இடங்களையும் சுட்டிக்காட்டியுள்ளது.

# தமிழினத்தின் சகலகட்சிகளும் பரிகாரம் தேடவேண்டும்

உடுப்பிட்டி, ஞாயிறு

"ஹரிஜனர்களின் ஆலயப்பிரவேச முயற்சிகளுக்கு இலங்கை தி. மு. கழகம் தொடர்ந்து ஆதரவளித்து வரும். ஆனால் பலாத்காரம் மூலம் ஆலயப்பிரவேசம் செய்வதை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம். சாத்வீகம் என்ற போர்வையில் ஆலயக்கதவுகளைத் பலாத்காரமாகத் திறக்குமாறு கேட்பது தவறானது. சிறுபான்மைத் தமிழர்களின் பிரச்சினை அரசியலுக்கு அப்பாற்பட்டது. தமிழினத்தின் நலனுக்காக உழைக்கும் சகல கட்சிகளும் ஒன்றுபட்டு ஆலயப்பிரவேசத்திற்குப் பரிகாரம் காணவேண்டியது அவசியம்." இவ்வாறு அறிக்கையொன்றை அகில இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் திரு. ஈ. டபிள்யு. தேவராஜன் விடுத்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

தமிழ் சமூகத்திலிருக்கும் ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்கச் சிறுபான்மையினத்தவரின் கல்வி வளர்ச்சி அபிவிருத்தியடைய வேண்டும். பாகுபாடுகள் இடைக்காலத்தில் ஏற்பட்டவையென்பதும், தக்கரீதியாக அடிப்படை அற்றதென்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும். சாதிப்பாகுபாடுகளைத் தீவிர பிரச்சாரம் மூலமே சமூகத்திலிருந்து இல்லாமற்செய்யலாம். உயர் சமூகத்தவரின் உள்ளக்கதவுகள் திறந்தால் ஆலயக்கதவுகளும் தானாகவே திறக்கும். தீண்டாமையும் ஓரளவுக்கு அழிந்துவிடும்.

## இன்றைய பலன்

(29 - 7 - 68)

ஆடி மீ 14 உ

திங்கட்கிழமை

திதி- சதுர்த்தி பகல் 4-43 மேல் பஞ்சமி.

நட்சத்திரம் — பூரம் பகல் 9-36 மேல் உத்தரம்.

ராகுகாலம் - 7-32— 9-02.

எமநேரம் - 12-02— 1-32.

இன்று பிறந்தவர்களுக்கு— வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளாது பூமிப்பிணக்குகளைத் தவிர்த்துக் கொள்ளவும். முதியவர் ஒருவரால் குடும்பத்தில் சில முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும். உள்ளக் கிடக்கைகளை வெளியிடாது ஊமையாகிவிடவும். தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் தோன்றிமறையும். இறைவழி நாட்டமும், எதையும் தாங்கும் இதயமும் இருப்பின், எதையும் எளிதில் சமாளிக்க முடியும். பொறுமையுடன் இருந்து உறுதியான நடவடிக்கைகள் எடுப்பின் வெற்றி உமக்கே.

மேஷம்- இனம் சிறும், இத்தனை முடக்கம்.

ரிஷபம்- நல்வழிநாடல், நகைச்சுவை.

மிதுனம்- விடாமுயற்சி பூமி இலாபம்.

கடகம்- நல்லெண்ணம் வளரும், நலிவும் நீங்கும்.

சிம்மம்- பொறுமைப் பார்வை, நிதானம்வேண்டும்.

கன்னி- அவசரமுடிவு, அதன்வழித் துன்பம்.

துலாம்- இல்லற மகிழ்ச்சி, இன்பவை நடக்கும்.

விருச்சிகம்- அன்னியர் பகை, ஆபத்துமுண்டு.

தனுசு- தாய்வழிப் பெருமை, தரமான வாழ்வு.

மகரம்- சுற்றம் வாழ்த்தும், சுகபோக நாள்.

கும்பம்- எதிரி பகை, ஒக்கமிகுதி

மீனம்- அன்பு வலை, ஆனந்தம் ஸே.

சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## திங்கள் 29—7—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

364 மீற்றர் அல் 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை- 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வளை, 8-00 இசைவேளை, 8-15 இன்லா மியமியதேகிகள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர் பகல் 12-00சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் அல் 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துகள், 5-30 நேயர் விருப்பம்.

இரவு 6-15 வானவில், 6-45 பாவலம், 7-00 இரசம சஞ்சிகை, 7-30 முத்திநெறி சைவ சஞ்சிகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு 9-45 கதாப்பிரசங்கம்- வி. கே. ஆறுமுகம்.

# சிறைச்சாலை வெற்றி

அனுராதபுரம், ஞாயிறு

அநுராதபுரம் பொது விளையாட்டரங்கில் பொலிஸ் கோஷ்டிக்கும் சிறைச்சாலை ஊழியர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்றதைப் பந்தாட்டப் போட்டியில் சிறைச்சாலை ஊழியர் பொலிஸ்கோஷ்டியை 5—3 ஆட்டங்களால் வெற்றியீட்டினர். வெற்றிபெற்றோருக்கு அநுராதபுரப் பாதுகாப்புச்சபைத்தலைவர் திரு. எஸ். பண்டார வெற்றிக் கேடயத்தை வழங்கினார்.

# அமோக விளைவு

சுழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு பலநோக்கு கூட்டுறவு சமாஜத்தினரால் கல்லுண்டாயில் நடாத்தப்படும் உப்பளம் இவ்வாண்டுக்குரிய விளைச்சல் சென்ற ஆண்டுகளைவிட அதிகரித்துள்ளது. தற்பொழுது உப்பு அள்ளும் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. விளைச்சல் அதிகரித்ததற்கு அமோக சுவாத்தியம் நன்கு அமைந்ததுதான் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

கன்னாகத்தில்

# நான்கு கோவில்களை திறந்துவிட கோரிக்கை

## பட்டினசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்

சுன்னாகம் பட்டினசபை பகுதியிலுள்ள நான்கு கோவில்களை ஹரிஜனர்களுக்குத் திறந்துவிடும்படி கோவில் தர்மகர்த்தாக்களை கோரும் தீர்மானமொன்று சுன்னாகம் பட்டினசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சுன்னாகம் பட்டினசபைத் தலைவர் திரு. பி. நாகலிங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இப்பிரேரணையை கூட்டத்தில் சமுகமளித்திருந்த 6 அங்கத்தவரும் ஆதரித்தனர். இருவர் கூட்டத்துக்கு சமுகமளிக்கவில்லை.

இப்பிரேரணையில் கூறப்பட்டிருப்பதாவது:-

சுன்னாகம் பட்டினசபைப் பகுதியிலுள்ள உடுவில் அம்மன் கோவில், சுன்னாகம் கதிரமலை சிவன்கோவில், ஐயனார் கோவில், மைலணி கந்தசாமி கோவில் ஆகிய நான்கு பிரபல ஆலயங்களை ஹரிஜனர்கள் வழிபடுவதற்குத் திறந்துவிடும்படி ஆலய தர்மகர்த்தாக்களை இச்சபை மிகவும் மரியாதையாகக் கோருகிறது.

இந்த நடவடிக்கை சகல மக்கள் மத்தியிலும் சம உணர்ச்சியை ஏற்படுத்துவதோடு பரஸ்பர நல்லெண்ணத்தையும், அமைதியையும் ஏற்படுத்தச்செய்யும்.

இந்த நடவடிக்கையை நமது வருங்காலச் சந்ததியினர் பாராட்டுவார்கள். தீண்டாமை வாழ்ந்தால், இந்துசமயம் அழியும் அல்லது தீண்டாமை ஒழிந்தால் இந்து சமயம் வாழும் என்று பல வருடங்களுக்கு முன்னர் மகாத்மா காந்தி கூறியதை ஞாபகப்படுத்துவது பயனளிக்கக்கூடியது.

# நல்லவர்களாக வாழலாம்

இமையாணன், சனி

"விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்கள் செல்வந்தர்களாக வாழாவிட்டாலும் நல்லவர்களாக வாழுகின்றார்கள். விளையாட்டுத் துறையில் பங்குகொள்ளும் மனிதனின் மனது பண்புள்ளதாக்கப்படுகின்றது" என்று உபசபாநாயகர் திரு. மு. இவசிதம்பரம் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகப் பரிசளிப்பு விழாவில் பேசும்போது கூறினார். திரு. க. வீரவாகு தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திருவாளர்கள் க. மாணிக்கம், சி. மயில்வாகனம் ஆகியோரும் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நாகேஷ் — விஜயநிர்மலா
நடித்த
பணமா பாசமா

வின்ஸர்
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
பி. சரோஜாதேவி
நடித்த
அரச கட்டளை

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
John Wayne &
Rita Hayworth
in
Circus World

இன்றுமட்டும்
MANOHARA
JAFFNA
Daily at 2-30, 6-30,
10-00 p. m.
Rajendra Kumar &
Sathana
in
ARZOO
[Hindi]
[Eastman color]
ஆர்ஸு [ஹிந்தி]
Music - Shanker
Jeikashian.

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி: 6-30 9-30
விடுமுறைதினங்களில் 2 30
ரவிச்சந்திரன் ஜெயலலிதா
நடித்த
குமரிப்பெண்


## விளம்பரம்

### அறிவித்தல்

யாழ். நுண்கலைத்தொழிற் பாடசாலை. இளைஞர் சமூக பொருளாதார முன்னேற்ற மன்றம். கிளினர் மண்டபம்-வண்ணார்பண்ணை.

பின்வரும்பாடங்கள் கற்பதற்கு பிரவேசவிண்ணப்பங்கள் 1-9-68 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. மோட்டார் இயந்திரம் திருத்துதல் 18 மாதங்கள்.

2. தையல்வேலை(மெசின்) 12 மாதங்கள்.

i. பிரவேச கட்டணம்5/- உபகரண கட்டணம் 25/- மாதாந்த கட்டணம் 15/- மோட்டார் இயல்.

ii. பிரவேச கட்டணம்5/- மாதாந்த கட்டணம் 5/- தையல் வகுப்பு.

மேற்படி காரியாலயத்தில் விண்ணப்பப் பத்திரங்களும் பெற்றுக்கொள்ளலாம். அல்லது 10சத முத்திரை ஒட்டி கடிதம் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

விலாசம்:- இளைஞர் மன்றம், 26, கே.கே.எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

சிவ. உ, சோமசேகரம்,
கௌரவ தலைவர்.
இ. சபாலிங்கம்.
கௌரவகாரியதரிசி. 894

## சுந்தரர் குருபூசை

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் திருக்கேதீஸ்வரத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையைஎதிர் வரும் வியாழக்கிழமை கொண்டாடவிருக்கின்றனர்


3வது வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
ரகுநாதன்
சந்திரகலா
நடித்த
நிர்மலா


# யாழ். ஹொக்கி கோஷ்டி மாத்தளை செல்லும்

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை பாடசாலைகளுக்கான ஹொக்கிப் போட்டி இம்முறை மாத்தளையில் நடைபெறவிருக்கிறது. இப்போட்டி ஆவணி மாதம் 7-ம் திகதி தொடங்கி 15-ம் திகதி முடிவடையும். இப்போட்டியில் கலந்து கொள்வதற்காக, யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்குள் இரு கோஷ்டிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இத் தெரிவுக் கோஷ்டிகளுக்கு விசேஷ பயிற்சி அளிப்பதற்காக, அகில இலங்கை ஹொக்கிப் பயிற்சியாளர் திரு. உடுப்பிட்டி விளையாட்டு அமைச்சின் ஆதரவில் இங்கு யாழ்ப்பாணம் வந்துள்ளார். திரு. உடுப்பிகெல்லை இத் தெரிவுக் கோஷ்டிகளுக்கு, யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலையும், மாலையும் விசேஷ பயிற்சி அளித்து வருகிறார்.

இத்தெரிவுக் கோஷ்டிகளின் விபரம் பின்வருமாறு:

17 வயதுக்குட்பட்டவர்:

பி. சிதம்பரம் [காப்டன்], ஆர். செல்லக்குமார், பி. பாக்கியஜோதி, கெ. சிவதாசன், எம். சிவசுப்பிரமணியம் [யாழ்ப்பாணக் கல்லூரி]. எஸ். கார்த்தரம், ஐ. சந்திரன், ஈ. எஸ். விஜேகரன், கே. மனோரஞ்சிதம் (யாழ். மத்திய கல்லூரி). எஸ். சந்திரமோகன், ஏ. ஆர். பிரேமக்குமார் (சென். ஜோன்ஸ் கல்லூரி). பி. ராஜசந்தன், பி. சுல்வரக்குமார், பி. சமரக்கொடி [மகாஜனாக் கல்லூரி]. பி. பாலசுப்பிரமணியம் (கனகரட்ணம் ம. மா. வி). ஆர். சிவராசா [அருணோதயாக் கல்லூரி]. ஆர். செல்வராசா [சேப்பாய் கிறிஸ்தவ கல்லூரி].

20 வயதுக் குட்பட்டவர்:

எம். ஜேசுதாசன் (காப்டன்), ஜி. ஹரிதாசன், ஜி. பொணி, ஜி. பெஞ்சமின் (யாழ்ப்பாணக் கல்லூரி). என். வடிவேல்வரன், எஸ். சாந்தரலிங்கம் [மகாஜனாக் கல்லூரி]. கே. யோகநாதன், கே. சத்தியமூர்த்தி, பி. சுந்தரலிங்கம், எஸ். தங்கரத்தினம், எஸ். ஜோசா (அருணோதயாக் கல்லூரி). ஜி. சாந்திகரன் (யாழ். மத்திய கல்லூரி). எம். ஜேரட்ணம், எஸ். மெய்யப்பன், வி. சிவசமசுந்தரம், ஏ. செல்வராசா (சென். ஜோன்ஸ் கல்லூரி). ஆர். அம்பலவாணர், பி. சுந்தரலிங்கம் (சேப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

[தே. நி]

## 'மாவை' பற்றி சட்ட மாணவர் இன்று ஆராய்ந்தனர்

மல்லைப்பிட்டி, திங்கள்

இலங்கை சட்ட மாணவர் சங்க விசேஷ பொதுக்கூட்டம் ஒன்று நேற்று காலை இலங்கை சட்டக்கல்லூரியில் நடைபெற்றது. மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் அண்மையில் நடைபெற்ற ஆலயப் பிரவேசம் சம்பந்தமாகத் தங்களது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்தைத் தாமதமின்றி திருத்தி, சட்டத்தை நிலைநிறுத்த ஆவனசெய்யுமாறு பிரதமர் டட்லி சேனநாயக்காவைக் கோரும் தீர்மானமொன்றும் இங்கு நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தை திரு. கே. ஞானச்சந்திரன் பிரேரிக்க, திரு. லெஸ்லி பெரேரா ஆதரித்தார். ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக கல்லூரி வளவினுள் ஒருநாள் சத்தியாக்கிரகம் செய்வதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது

## பரிசளிப்புவிழா

உடுப்பிட்டி, ஞாயிறு

புலோலி மேற்குச் சைவப் பாலிகா பாடசாலையின் பரிசளிப்பு விழாவும், பெற்றோர் தின விழாவும் எதிர் வரும் 1ந்திகதி நடைபெறும். இளைப்பாறிய ஆசிரியர் திரு. சபாபதிப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். அவரது சேவைநலம் பாராட்டு விழாவும் அன்று நடைபெறும். திருமதி சபாபதிப்பிள்ளை பரிசில்களை வழங்குவார்.

## இ. தி. மு. க. கிளை

உடுப்பிட்டி, ஞாயிறு

கரணவாய் தெற்கு மண்டானில் இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகக் கிளையொன்று நிறுவப் பட்டுள்ளது. இ. தி. மு. க. துணைப்பொதுச் செயலாளர் திரு. டபிள்யூ. தேவராசன் தலைமையில் நடைபெற்ற இவ் அங்குரார்ப்பணக்கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு. க. கந்தசாமி. உபதலைவர் திரு. ச. திருவேணம். செயலாளர்- திரு. க. இராசரத்தினம். உபசெயலாளர்- திரு. இ. இராசதுரை. பொருளாளர் திரு. க. சின்னத்தம்பி.

## டெஸ்ட் கிரிக்கெட்

## இங்கிலாந்து முதல் இன்னிங்ஸ் 302 ஓட்டங்கள்

லண்டன், ஜூலை 27

இங்கிலாந்துக்கும், அவுஸ்திரேலியாவுக்குமிடையில் இங்கிலாந்தில் நடைபெறும் 4-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான இன்று, இங்கிலாந்து கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 302 ஓட்டங்களைப் பெற்றது. இங்கிலாந்து கோஷ்டியின் கடைசி துடுப்பாடி வீரர் அண்டவுட் திறமையாக விளையாடி ஆட்டமிழக்காது 45 ஓட்டங்களைப் பெற்றார். அவுஸ்திரேலியா கோஷ்டியின் பந்தெறி வீரர் கோணலி 72 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். அவுஸ்திரேலியாக் கோஷ்டி தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டம் முடிவடையும் போது 2 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 92 ஓட்டங்களைப் பெற்றது. ரெட்பாத்தும், லோரியும் ஆட்டமிழக்காது முறையே 35, 01 ஓட்டங்களைப் பெற்றனர்.

அவுஸ்திரேலியாக் கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 315 ஓட்டங்களைப் பெற்றது ...

## வரி விளம்பரம்

### தேவை

வெல்டர்:

மின்சாரத்தினால் சகல லோகங்களையும் ஒட்டிக் கொடுக்கக்கூடிய மிகத் திறமைவாய்ந்த வெல்டர் தேவை நேரில் விண்ணப்பிக்கவும். வ. பஞ்சாட்சரம், 'ஸ்ரீமுருகன் மின்சார வெல்டிங் வேக், 46, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1276

எமது தொழிற்சாலையில் கடமையாற்ற பெண் பிள்ளைகளும் சைக்கிள் விற்பனையாளர்களும் தேவை. தேவன்ஸ் இன்டஸ்றீஸ் 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1277

### விற்பனைக்கு

வீடு வளவு:

மண்டதீவு, மேற்கு 1-ம் வட்டாரம் அம்மன்கோவில் கடற்கரை வீதி வடக்கு பக்கத்தில் நேரம் வடக்கு பாரநொச்சியளவு 10 பரப்பும், வீடுகளும் நல்ல தண்ணீர்க் கிணறும், தென்னை, மா, வேம்பு ஆகிய வான் பயிர்களுடன் விற்பனைக்கு உண்டு. விபரம் தெரிய விரும்புவோர் கெ. சிவசுப்பிரமணிய ஐயர், மறவன்புலோ, சாவகச்சேரி. 1278

இந்துசமயம்:

G. C. E. வகுப்பு 1969—1970 புதிய பாடத்திட்டப்படி சிவநெறித் தொண்டர் ஆ. கந்தையா எம். ஏ. அவர்கள் எழுதிய இந்துசமயம் திருத்திய புதிய பதிப்பு விலை 3-50. ஸ்ரீசாந்தா அச்சகம், புத்தகசாலை, 213, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். 1223

### கல்வி

மெக்கானிக் பாடங்கள்:

செப்டம்பர் மாதம் ஆரம்பமாகவிருக்கும் எமது ஐந்தாவது மோட்டார் டிராக்டர் டீசல் முழுநேர பயிற்சி வகுப்புகளுக்கும் துரித சாரதிப் பயிற்சிகளுக்கும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேர விரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும், அன்றி நேரில் தொடர்புகொள்ளவும். அதிபர், ஸ்ரீராஜ் ஓட்டோமொபைல் என்ஜினியரிங் நிறுவனம், மொத்தக்கசாக் மாளிகை மேல்மாடி, 11/A & 11/B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1274


இப்பொழுது மக்கள் ஆதரவுடன்
வீறுநடை போடுகிறேன்
நான்
பிளாஸா (கொழும்பு) மைலன் (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
இன்று முதல்
கிங்ஸ்லி
(கொழும்பு)
★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
மனோரமா-நாகேஷ்-முத்துராமன்
பேபி பத்மினி-மனோகர்
நடித்த
ஸ்ரீ விநாயகா பிக்சர்ஸ்
நான்
இன்று முதல்
கெபிட்டல்
(கொழும்பு)
★ ராஜ்கபூர்
★ ராஜேந்திரகுமார்
★ வைஜந்திமாலா
நடித்த
சங்கம்
(டெக்னிக் கலர்)

மானிப்பாய்
வெஸ்லி சினிமா

மேஜர்
சுந்தரராஜன்
முத்துராமன்
ஏ. வி. எம்.
ராஜன்
ஜெயலலிதா
நாகேஷ்
நடித்த
A. V. M. புரடக்ஷனின்
மேஜர் சந்திரகாந்த்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள தேர்ச்சி.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களம் படிக்கவேண்டுமென்ற எவ்வித நிபந்தனையும் இன்றி 1956 செப்டம்பருக்கு முன்பு சேவையில் சேர்ந்தவர்களே பழைய ஊழியர். இவர்களில் பலர் எமது வேண்டுகோளின்படி மறுத்து நின்றார்கள். ஸ்ரீமாவோ பண்டாரநாயகா அரசாங்கம் ஒரு கால எல்லையை குறிப்பிட்டு, அக்கால எல்லைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிபெறாத பழைய ஊழியர்கள் கட்டாய ஓய்வு பெறவேண்டுமென்று விதித்தது. பல ஊழியர்களுக்கு கட்டாய இளைப்பாற்று உத்தரவுகளும் அனுப்பப்பட்டன. இந்த நேரத்தில் சுமார் 2000 தமிழ் ஊழியர்கள் மொழிச்சட்டத்தின் கீழ் தாமாக இளைப்பாறினார்கள். இவர்களை ஓய்வு பெறாது சேவையில் தொடர்ந்து இருக்கும்படி நாம் வேண்டுகோள் விடுத்தோம். அதையும் பொருட்படுத்தாது இளைப்பாறியவர்கள் எமது கட்சியினுள் தான் அந்நிலை அடைந்தார்களென்று கூறுவது தவறாகும். எமது கோரிக்கைப்படி சிங்களம்படியாது தொடர்ந்து சேவையிலிருந்த பழைய ஊழியர்கள் தமது நிறுத்தப்பட்ட சம்பள உயர்வுகள், பதவி உயர்வுகள் எல்லாவற்றையும்பெற்று 55 வயது வரைக்கும் சிங்களத்தேர்ச்சி பற்றிய எவ்வித நிபந்தனையுமின்றி தொடர்ந்து சேவையிலிருக்க நாம் வழிவகுத்திருக்கிறோம். திறைசேரிச் சுற்றறிக்கை 700 முந்திய சுற்றறிக்கைகளை ரத்துச் செய்து இந்த உரிமையை பழைய ஊழியர்களுக்கு உறுதிசெய்திருக்கின்றது. 55 வயதிற்கு மேலும் இவ்வுரிமையைப்பெற முயற்சித்தோமாயினும் அதில் பூரண வெற்றிபெற முடியவில்லை. ஆயினும் 56-ம் ஆண்டுக்கு முன் சேவையில் சேர்ந்த தமிழ் ஊழியர் சிங்கள தேவையின்றி 55 வரைக்கும் சேவை புரியலாம் என்றுள் அதுவரைக்கும் தனிச்சிங்களத்தை பரிபூரணமாக அமுல் நடத்தமுடியாது என்பதே அதன் பெறுபேறு. இதை திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா அவர்களே பாராளுமன்றத்தில் கூறினார். திறைசேரி சுற்றறிக்கை 700 முந்திய அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை எவ்வளவு தூரம் மாற்றியிருக்கிறது என்பதை உய்த்துணர்ந்து நாம் புரிந்துகொள்ளலாம்.

எமது வேண்டுகோளின்படி சிங்களம் படியாதுவிட்டு தன்மானத்தோடு சேவையில் தொடர்ந்திருக்க முடியாது என்றெண்ணி இளைப்பாறிய தமிழ் ஊழியர்களுக்கு நிவாரணம் தேட நாம் பலதடவை முயற்சித்தோம். அவர்களை கூட்டுத்தாபனங்களிலும் சேவையில் சேரமுடியாதென்ற முந்திய அரசாங்கத்தின் கொள்கையை மாற்றி அவர்கள் கூட்டுத்தாபனங்களில் சேர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. பழைய சேவைகளில் மீண்டும் சேர்க்க வேண்டுமென்ற எமது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

## புதிய ஊழியர்கள்

1956 செப்டம்பருக்குப் பின்னர் சேவையில் சேர்ந்தவர்கள் மூன்று ஆண்டுகளுக்கிடையில் சிங்களத்தில் தேர்ச்சி பெறுவோம் என்ற நிபந்தனையுடன் சேர்ந்தார்கள். அவர்களிலும் பலர் எமது வேண்டுகோளுக்கு இணங்க சிங்களம் படிக்காது விட்டார்கள். 1965-ம் ஆண்டு அரசாங்கம் எடுத்த முடிவின்படி இவர்கள் சிங்களத்தில் தேர்ச்சிபெறுவதற்கு ஆரம்பத்தில் பொருந்திக்கொண்ட பிரகாரம் மேலும் ஆண்டுகள் கொடுக்கப்பட்டன. எமது கேள்விப்படி சிங்களம் படிக்காது விட்ட காரணத்தினால் இவர்கள் சேவையில் சேரும்பொழுது பொருந்திக்கொண்ட ஒரு காலக்கெடுவின் சிறிதும் இழக்கவில்லை. 65-ம் ஆண்டு பூஜ்ஜாதத்திலிருந்து மூன்று ஆண்டுகளுக்கிடையில் தேர்ச்சி பெற்றால் பழைய சம்பள உயர்வுகள், சேவை உயர்வுகள் எல்லாம் அளிக்கப்படுமென்று திறைசேரி சுற்றறிக்கை 701 கூறுகிறது. அக்கால எல்லையில் தேர்ச்சி பெறத் தவறுபவர்களுக்குக் கூட மேலும் கால நீடிப்பு பெறுவதற்குரிய வாய்ப்பு அதே சுற்றறிக்கை மூலம் கொடுக்கப் பட்டிருக்கிறது. தமிழ் ஆசிரியர்கள், தமிழ் சுருக்கெழுத்தாளர்கள் தட்டெழுத்தாளர், வானொலி தமிழ் அறிவிப்பாளர் ஆய்வு உத்தியோகத்தர் சேவையில் சேருவதற்கு அடிப்படை கல்வித்தகுதி தேவையற்ற சிற்றூழியர்கள் ஆகியோருக்கு சிங்கள நிபந்தனைகளிலிருந்து பூரணவிலக்களிக்கப்பட்டிருக்கிறது. நாம் பெற்ற இவ்விதிவிலக்கின்படியே ஆஸ்பத்திரி சிற்றூழியர்கள் சிங்களத் தேர்விலிருந்து விலக்கப்பட்டார்கள். வேறு சில வகுப்புகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கு ஒரு குறைந்த தரத்தில் சிங்களத் தேர்ச்சிபெற வேண்டுமென்ற நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

முந்திய அரசாங்கத்தின் கொள்கை புதிய ஊழியர்கள் எம்மொழி மூலம் சேவையில் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் பதவி உயர்வுப் பரீட்சைகளை சிங்களத்திலேயே எடுக்க வேண்டுமென்று இருந்தது. தேசிய அரசாங்கத்தின் கொள்கை திறைசேரி சுற்றறிக்கை 701 இன்படி சேவையில் சேர்ந்த மொழியிலேயே பதவி உயர்வுப் பரீட்சை எடுக்கலாம் என்பதாகும். எழுதுவினைஞர்கள் சிங்கள தட்டெழுத்தில் தேர்ச்சி பெறவேண்டும் என்பதை மாற்றி தமிழ் மூலம் சேர்ந்தவர்கள் தமிழ் தட்டெழுத்தில் தேர்ச்சி பெறவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கின்றது. எம்மை நம்பிய தமிழ் ஊழியர்களை தமிழரசுக்கட்சி நட்டாற்றில் விட்டுவிட்டது என்ற கூற்று எவ்வளவு தூரம் உண்மைக்கு மாறானது என்பது மேற்கூறியவற்றால் புலப்படும். நாம் விரும்பியதை எல்லாம் செய்ய முடியாவிட்டாலும் தமிழ் ஊழியர்களுடைய நிலை முந்திய அரசாங்கம் ஏற்படுத்திய அவலநிலையிலிருந்து எவ்வளவோ உயர்ந்திருக்கின்றது. இன்னும் இருக்கும் குறைகளை நிவர்த்தி செய்ய தமிழரசுக்கட்சி தொடர்ந்தும் முயற்சி செய்துகொண்டே வருகின்றது. மேற்குறிப்பிட்ட முன்னேற்றங்களை எவ்வகையிலும் முயற்சிசெய்யாதவர்கள் எம்மீது குற்றம் கூறுவது வித்தையாய் இருக்கின்றது.

## டாக்டர் விடுவிக்கப்பட்டது

வல்வெட்டித்துறை, ஞாயிறு

அச்சுவேலி துப்பாக்கி சூடுசம்பந்தமாக கைப்பற்றப்பட்டு வைக்கப்பட்டிருந்த டாக்டரை பொலிசார் விசாரணையின்பின், செல்ல அனுமதித்தனர்.

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. சண்முகலிங்கம், இன்று பிற்பகல் ஸ்தலத்தில் விசாரணை செய்தார். எஸ். இராசதுரை என்பவர் சாட்சியமளிக்கையில், சம்பவதினம் இரவு 10-30 மணிக்கு, இடைக்காட்டிலிருந்து காரில் வந்ததாகவும் ரோட்டில் சனக்கூட்டம் நின்றதாகவும், தவராசா இரத்தக்காயங்களுடன் விழுந்து கிடந்ததாகவும், தான் தபாற்கந்தோருக்குச் சென்று காங்கேசன்துறை பொலிஸுக்கு அறிவித்ததாகவும், கூறினார்.

சந்தேக நபரான அச்சுவேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி அன்னராசாவை ரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார் சாவமடைந்த குலசிங்கத்தின் வாக்குமூலத்தை பொலிஸார் ஆஸ்பத்திரியில் பதிவுசெய்தனர்.

இறந்தவரின் நலனைக் கவனிப்பதற்காக, புறக்டர் ஆர். ஜே. செல்வரத்தினம், புறக்டர் கே. குணரத்தினம் ஆகியோர் ஆஜரானார்கள்.

## வெள்ளத்துக்கு நால்வர் பலி

லக்னோ, ஜூலை 28

உத்தரபிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் நால்வர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர்...

1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் தமிழர்கள், தங்கள் குழந்தைகளை, இலங்கைத்தமிழர்களென பதிவு செய்வதனாலேயே, இலங்கைத்தமிழரின் - பிறப்புவிகிதம் அதிகரித்துள்ளதாக, குடிசனமதிப்பு இலாகா உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரிகளில் கவனயீனமென்றும், செலவதையே அங்கு எழுதுகிறார்களென்றும். விசாரணை செய்வதில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை சிங்களவர்கள் தீவிரமாக அமுல்நடத்துவதாலேயே, சிங்களவர்களின் பிறப்பு விகிதம் குறைந்ததாகவும், தமிழர்கள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் அக்கறை காட்டாததினாலேயே, தமிழரின் பிறப்பு விகிதம் அதிகரித்துள்ளதாகவும், குடும்பக்கட்டுப்பாட்டு இலாகா உத்தியோகத்தர் தெரிவித்தார்.

# பூநகரி, பல்லவராயன்கட்டு தலைவர் உபதலைவர் தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்

பூநகரி கிராமசபைத் தலைவர் தெரிவு நேற்று காலை 9 மணிக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேள் தலைமையில் நடைபெற்றது.

தலைவராக தமிழரசுக் கட்சி ஆதரவாளரான திரு. வை. வரிவிபுரம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். உபதலைவராக தமிழரசுக்கட்சி ஆதரவாளரான திரு. எஸ். பொன்னம்பலம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

பூநகரி பல்லவராயன் கட்டு கிராமசபைத் தேர்தல் நேற்று காலை 11 மணிக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேள் தலைமையில் நடைபெற்றது. தலைவராக தமிழரசுக்கட்சி ஆதரவாளரான திரு. எஸ். இரத்தினம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராக தமிழரசுக்கட்சி ஆதரவாளரான திரு. எஸ். தில்லைநாதர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்

[த நி.]

காற்சட்டையுடன்

## வந்த டாக்டரை நீதிபதி வெளியேற்றினார்

சாவகச்சேரி, ஞாயிறு

அரசாங்க ஊழியர்கள் நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க வரும் பொழுது பூரண உடையணியாமல் காற்சட்டை, சேட்டுடன் வருவது தவறானதாகும் என சாட்சியமளிக்க வந்த அரசாங்க டாக்டர் ஒருவரைப் பார்த்து நீதிபதி கூறினார்.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் விபத்து வழக்கொன்றுக்கு சாட்சியமளிக்க வந்த டாக்டர் ஒருவர், தேசிய உடையையோ, பூரண ஆங்கில உடையையோ அணியாமல் சாட்சிக் கூண்டிற்கு வந்தது தவறெனக்கூறிய நீதிபதி திரு. வின்னராசா, சாட்சியை நீதிமன்றத்திலிருந்தும் வெளியேற்றினார்.

## சுண்டிக்குளி மகளிர் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரிப் பரிசளிப்புவிழா இம்மாதம் 31-ம் திகதி வண. ஜே. ஏ. ஆர். நவரெத்தினம் தலைமையில் நடைபெறும். இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜோர்ஜ் தம்பையாபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி தம்பையாபிள்ளை வெற்றிபெற்றோருக்கு பரிசில்களை வழங்குவார்.

## அபேட்சகர்கள் தெரிவு

அளவெட்டி, திங்கள்

அடுத்த பொதுத்தேர்தலில் அபேட்சகர்களை நிறுத்துவதுபற்றி ஆராய்ந்த கூட்டரசாங்க கட்சிகளின் குழு, வடக்குகிழக்கு மாகாணங்களில் சகல தொகுதிகளிலும் அபேட்சகர்களை நிறுத்துவதென தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் வவனியா, பருத்தித்துறை, உடுப்பிட்டி, யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, கிளிநொச்சி, மன்னார், உடுவில், காங்கேசன்துறை ஆகிய தொகுதிகளுக்கு அபேட்சகர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும், கிழக்கு மாகாணத்தில் எல்லாத் தொகுதிகளுக்கும் அபேட்சகர்கள் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## நியமனப்பத்திரம் தாக்கல்

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சிப் பட்டின சபை முதலாம், இரண்டாம், மூன்றும் வட்டாரத்திற்கான இடைத்தேர்தல் நியமனப்பத்திரங்கள் அடுத்தமாதம் 10ம்திகதி பட்டினசபையில் ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன.

## பத்மினி கொலை தீர்ப்பு இன்று?

கொழும்பு, ஞாயிறு

பத்மினி குலரத்தின கொலைவழக்கில் நாளை தீர்ப்பளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று பிரதம நீதியரசர் திரு. எச். என். ஜீ. பெர்னாண்டோ ஜூரிமாருக்கு தொகுப்புரை நிகழ்த்த ஆரம்பித்து சட்ட நுணுக்கங்களை விளக்கத்தொடங்கியதும் விசாரணை நாளைக் காலை 9 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

## சமூக குறை......

1-ம் பக்கத் தொடர்ச்சி

தில் இடம் பெற்ற சம்பவங்கள் பற்றி அரசாங்கம் ஆராய்கிறது. தற்போதுள்ள சமூகக் குறைபாடுகளை நீக்கும் சட்டத்தில் பலவீனங்கள் இருக்குமானால் அவைகளை நீக்குவதற்கான திருத்தங்களைச் செய்ய அரசாங்கம் தயாராய் இருக்கின்றது என்று பிரதம மந்திரி கூறினார்.

திரு. சி. சுந்தரலிங்கத்தை தடுப்புக்காவலில் வைப்பது பற்றியும் ஆராயப்பட்டது. இந்த விஷயத்திலும் நாம் மிக கவனமாகக் காரியமாற்றவேண்டியிருந்தது. பொலிசார் மிகக்கவனமாக சட்டத்தை அமுல் நடத்தியிருக்கிறார்கள் என்று பிரதம மந்திரி கூறினார்.

எதிர்க்கட்சியின் கேள்விகளுக்கு பிரதம மந்திரி மேலும் பதிலளிக்கையில் "எனக்குத் தெரிந்தவரை சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச்சட்டம் நடைமுறைச் சாத்தியமற்றதென்று யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரிண்டன் அறிவித்திருப்பதாகத் தெரியவில்லை'' என்றார்.

திரு. எஸ். டி. பண்டாரநாயகவின் பல கேள்விகளுக்குப் பிரதமர் மேலும் பதிலளிக்கையில் திரு. சுந்தரலிங்கம் உங்கள் கட்சியைத் தடைசெய்யும்படி எனக்கு எழுதியுள்ளார். நான் மிகவும் அவதானமாக இருந்துவருகிறேன்'' என்றார்.

# “கொலையுண்டவர் உடலில் 36 வெட்டுக் காயங்கள்”

## தச்சன்தோப்பு கொலைவழக்கு

சாவகச்சேரி, ஞாயிறு

தச்சன்தோப்பில் கொலையுண்ட வைரமுத்துவின் உடலைப் பிரேத பரிசோதனை செய்தேன். அவரின் உடலில் 36 வெட்டுக்காயங்கள் இருந்தன. இவைகள் அனைத்தும் கத்தியால் வெட்டப்பட்டதால் ஏற்பட்டவையாகும். இறந்தவரின் உடலை அவரது மனைவி நாகம்மாவும் சீனிவாசகம் என்பவரும் அடையாளம் காண்பித்தனர்.

சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசா முன்னிலையில் முதலா[illegible] தோப்பு கொலை வழக்கில் சாட்சியமளித்த சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரியைச்சேர்ந்த டாக்டர் எஸ். விநாயகானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜூலை 7-ந் திகதி தச்சன்தோப்பு வாசியான வைரமுத்துவைக் கத்தியால் வெட்டிக்கொலைசெய்ததாக அதே வாசிகளும் சகோதரர்களுமான நன்னி பூபாலசிங்கம், நன்னி தம்பிமுத்து ஆகிய இருவர்மீதும் சாவகச்சேரிப் பொலிஸார் கொலைக் குற்றஞ் சாட்டி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேல்விசாரணை ஆகஸ்ட் மாதம் 5-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] ஆண்டு ஜூலை மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org